<u>தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்</u>
<u>திட்ட செயலாக்க அலகு – கரூர் மாவட்டம்</u>

<u>மகளிர் சுய உதவிக் குழு அடையாள அட்டை</u>




கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குழு அடையாள அட்டை மே தினத்தன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

## இளைஞர் தொழிற் திறன் பயிற்சி – 2010 – 2011




மகளிர் திட்டத்தின் மூலம் 2010 – 2011ம் ஆண்டில் இளைஞர் தொழிற்திறன் பயிற்சி ஆச்சிமங்கலம், சக்தி நர்சிங் கல்லூரி மூலம் பயிற்சிஅளிக்கப்பட்டதில் கரூர், அரவிந்த் கண் மருத்துவமனையில் செவிலியர்களாக பணிபுரிந்து வருவதை உதவி திட்ட அலுவலர் (பயிற்சி) ஆய்வு செய்தார்.

வேலைவாய்ப்பு முகாம் – 2010 – 2011



கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் 2007 – 2008 முதல் 2010 – 2011ம் ஆண்டுவரை மகளிர் திட்டத்தின் மூலம் இளைஞர் தொழிற் திறன் பயிற்சி பெற்ற அனைத்து இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு 25.01.2011 அன்று கரூர் மாவட்டத்தில் உள்ள டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், JCB நிறுவனம் மற்றும் காப்பீட்டு நிறுவனம் போன்ற 18 நிறுவனங்களிலிருந்து மேலாளர்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான இளைஞர்களை தேர்வு செய்து வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

## மணிமேகலை விருது – 2009 – 2010



கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாவட்ட அளவிலான மணிமேகலை விருது 26.01.2011 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

## மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் அமைத்தல் – 2010 – 2011



கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் 2010 – 2011ம் ஆண்டில் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மேட்டு திருக்காம்புலியூர் ஊராட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் குழுக்களை மகளிர் திட்டம், திட்ட அலுவலர் திருமதி.எஸ்.ராஜலட்சுமி ஆய்வு செய்தார் உடன் உதவி திட்ட அலுவலர் (வாழ்வாதாரம்) திரு.ஆ.கணேசன் உடன் இருந்தார்.

<u>பொருளாதாகடன் பெற்ற குழு பார்வை – 2010 – 2011.</u>



கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் 2010 – 2011ம் ஆண்டில் பொருளாதாரகடன் பெற்று கறவைமாடு கொள்முதல் செய்து பால் உற்பத்தி தொழில் செய்து வரும் தோகமலை ஊராட்சி ஒன்றியம், பாப்பக்காப்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் பாப்பாத்தியம்மன் மகளிர் சுய உதவிக் குழுக்களை திட்ட அலுவலர், திருமதி.எஸ்.இராஜலட்சமி பார்வையிட்டார்.

**<u>பொருளாதாரகடன் பெற்ற குழு ஆய்வு</u>**



கரூர் மாவட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் பொருளாதாரகடன் பெற்று ஆயத்த ஆடைகள் விற்பனை செய்யும் தொழில் செய்து வரும் கரூர் ஊராட்சி ஒன்றியம், காதப்பாறை ஊராட்சியில் செயல்பட்டு வரும் சரோஜினி மகளிர் சுய உதவிக் குழுக்களை திட்ட அலுவலர், திருமதி.எஸ்.இராஜலட்சமி பார்வையிட்டார். உதவி திட்ட அலுவலர் (கணக்கு மற்றும் நிர்வாகம்) திருமதி.பூ.தனம் உடன் இருந்தார்.